65

# "இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன?"

## மாற். 10:17-27; மத். 19:16-26; லூக். 18:18-27, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

மருத்துவ அறிவியலானது இப்போது, உடலுக்குள் கண்ணோக்கக் கூடிய அளவுக்குப் பல்வேறு கருவிகளைக் கொண்டுள்ளது: எக்ஸ்ரே இயந்திரங்கள், CAT ஸ்கேன்கள், MRIக்கள் மற்றும் இவை போன்றவை. "ஒரு நபரின் மனதை எக்ஸ்ரே எடுக்கமுடிந்து, அந்தத் தனிநபர் சிந்தித்துக் கொண்டிருந்தது என்ன என்று காணமுடிந்தால் எப்படியிருக்கும்?" என்று நீங்கள் வியந்திருக்கலாம். இயேசுவால் அதைச் செய்ய முடிந்தது. அவரால், மேற்பரப்புக்குக் கீழாக இருதயத்திற்குள் காணமுடிந்தது, ஒரு நபர் உண்மையில் எவ்வாறு இருந்தார் என்பதை அறியமுடிந்தது. இதற்கான ஒரு உதாரணத்தை நாம் மாற்கு 10:17-22[1]ல் கொண்டுள்ளோம்:

> பின்பு, அவர் புறப்பட்டு வழியிலே போகையில், ஒருவன் ஓடி வந்து, அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு: "நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்னசெய்ய வேண்டும்" என்று கேட்டான். அதற்கு இயேசு: "நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனு மில்லையே. விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப் பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப் பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக் கிறாயே" என்றார். அதற்கு அவன்: "போதகரே, இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்" என்றான். இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து: "உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக்கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றிவா" என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான்.

# அந்த இளைஞரின் வாழ்வில் குறைவுபட்டிருந்தது என்ன?

மக்களில் சிலரை நாம் உடனே விரும்புகின்றோம்; மற்றவர்களை நாம் மதிப்பதற்குச் சற்றுக்காலம் ஆகிறது. மாற்கு 10ல், இயேசுவிடத்தில் வந்த இளைஞர், நாம் உடனடியாக விரும்பக் கூடியவரைப் போல் இருக்கின்றார். இவர் பாராட்டத்தக்க பல குணங்களைக் கொண்டிருந்தார்.

(1) இவர் சரியான வழியில் வந்தார்: இவர் இயேசுவைச் சந்திக்க ஓடினார். தாங்கள் விரும்புவது என்ன என்பதை அறிந்து தங்களின் இலக்கு களைச் சாதிக்க துரிதப்படுகிற மக்களை நாம் பொதுவாக விரும்புகின்றோம். மேலும், இம்மனிதர் கிறிஸ்துவுக்கு முன்பாக முழங்கால்படியிட்டார். இவர் ஒரு கலகக்கார இளைஞராக, அதிகாரத்தில் உள்ளவர்கள்மீது மரியாதை யற்றவராக இருந்ததில்லை.

(2) இவர் சரியான நோக்கம் குறித்து வந்தார்: பலர், இந்த வாழ்வைப் பற்றி மட்டுமே அக்கறை கொண்டிருக்கக் கூடிய ஒரு வயதில், இவர் உண்மையில் முக்கியத்துவமானதாக உள்ளதை-நித்திய ஜீவனை-ப் பற்றி வலிவார்ந்த அக்கறை கொண்டிருந்தார்.

(3) இவர் சரியான இடத்திற்கு வந்தார்: இவர் தனது கூட்டாளிகள் என்ன கூறுவார்கள், கூட்டத்தினர் என்ன நினைப்பார்கள் அல்லது மதரீதி யான அதிகாரிகள் என்ன நினைப்பார்கள் என்பதில் ஆர்வம் கொண்டிருக்க வில்லை. பதிலைக் கண்டறிவதற்கு இவர் கிறிஸ்துவிடம் வந்தார்.

(4) இவர் சரியான வேளையில் வந்தார்: இவர் இளைஞராயிருக்கும் போது வந்தார். ஞானியான மனிதர், "நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், 'எனக்குப் பிரியமானவைகளல்ல' என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும் ... அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை" என்று சொன்னார் (பிர. 12:1, 7).

இந்த நல்ல பண்புகள் எல்லாம் இருந்தும்கூட, இவர் தமது வாழ்வில் ஏதோ குறைவு இருந்தது என்று உணர்ந்தறிந்தார். இவர், "நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார் (மாற். 10:17).

நீங்கள் எப்போதாவது, ஒரு கேள்வியைக் கேட்டு, பொருத்தமற்றதாகக் காணக்கூடிய ஒரு பதிலைப் பெற்றுள்ளீர்களா? இயேசுவின் பதிலைப் பொறுத்தமட்டில் முதல் நோக்கில் விஷயம் இவ்வாறு இருந்ததாகவே காணப்படுகிறது: "நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே" (மாற். 10:18).

கிறிஸ்துவின் தெய்வீக இயல்பைப் புரிந்துகொள்ளாத சிலர், இயேசு தாமே தமது தெய்வீக இயல்பை மறுத்தார் என்று நிரூபிப்பதற்கு இந்த வசனத்தைப் பயன்படுத்த முயற்சி செய்கின்றார்கள். இருப்பினும் [வேதாகமத்தின்] மற்ற இடங்களில், கிறிஸ்து தமது தெய்வீகத்துவத்தை உறுதிப்படுத்தினார். எடுத்துக்காட்டாக, யோவான் 14:9ல் அவர், "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்று கூறினார். அதை அவர்

இவ்விடத்தில் மறுப்பதற்குக் காரணம் எதுவும் இருக்காது. உண்மையில் நாம், இயேசுவின் வார்த்தைகளை அதிக நெருக்கமாகக் கண்ணோக்கும் போது, அவர் தமது தெய்வீகத்துவத்தை மறுப்பதற்குப் பதில் அதை உறுதிப்படுத்தினார் என்றே நாம் கண்டறிகின்றோம். இம்மனிதர் கிறிஸ்துவை "நல்ல போதகர்" என்று அழைத்தார், இது அவர் இயேசுவை மேசியா என்று புரிந்துகொண்டதற்கான குறிப்பு எதையும் காண்பிப்ப தில்லை. இயேசு, "நல்ல" என்ற வார்த்தையைப் பிடித்துக் கொண்டு, தம்மை நல்லவர் என்று இந்த மனிதர் நினைத்தால், தாம் தேவனாக இருக்க வேண்டும் - ஏனெனில் தேவன் மட்டுமே நல்லவராக இருக்கின்றார் - என்பதைச் சுட்டிக்காண்பித்தார்.

கர்த்தருடைய கூற்று இருபுறமும் கருக்குள்ள பட்டயமாக உள்ளது. இது இயேசு நல்லவர் ஆனால் தெய்வீகமானவர் அல்ல என்று கூறுபவர்களைக் குற்றப்படுத்துகிறது: இவர் நல்லவராயிருந்தார் என்றால், இவர் தேவனாக இருந்தார்; இவர் தேவனாக இருக்கவில்லை என்றால், இவர் நல்லவரல்ல. மேலும் இது, தங்கள் சொந்த நற்செயல்களினால் இரட்சிக்கப்படப் போதுமான அளவு நல்லவர்களாக இருப்பதாக நினைப்பவர்களையும் குற்றப்படுத்துகிறது. "தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே."

தமது தெய்வீகத்துவம் பற்றிய கருத்தை அறிமுகப்படுத்திய நிலையில், கிறிஸ்து இந்த மனிதரின் கேள்விக்குப் பதில் அளித்தார்: "விபசாரஞ் செய்யா திருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே." இந்த இளம் ஆராய்ச்சியாளர் ஒரு சாதாரண தவறைச் செய்திருந்தார்; தேவனுடைய தொடக்க அறிவுறுத்து தலுடன் கூடுதலாக இணைப்புரைக்க அறிவுமிக்க ஒரு போதகர் வேண்டி யிருந்தது என்று இவர் நினைத்தார். பலர், புதிய ஏற்பாட்டைத் தங்கள் ரசனைக்கு மிகவும் எளியதாகவும் ஆரம்ப நிலையானதாகவும் இருப்பதாகக் கண்டறிகின்றனர்; இவர்கள் அதிகமானவற்றை விரும்புகின்றனர். இவர்கள் அதிகமானவற்றை விரும்புவதால், அதிகமானவற்றைப் பெறுகின்றனர் (2 தீமோ. 4:3, 4). இருப்பினும் இயேசு, இம்மனிதருக்குத் தேவனுடைய நிபந்தனைகளை[யே] நினைவூட்டினார். மத்தேயு சுவிசேஷத்தின்படி அவர், "நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள்" என்றார் (மத். 19:17ஆ).

மக்கள், "ஒன்றும் செய்யத் தேவையற்ற" மதத்தை விரும்புகின்றனர். அவர்கள் ரோமர் 4:5ஐ ("ஒருவன் கிரியை செய்யாமல்" என்பதை) எடுத்துக் கொண்டு, இது தாங்கள் எவ்விதக் கிரியையும் செய்யவே தேவையில்லை என்று போதிக்கிறதாக வலியுறுத்துகின்றனர்.[2] நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கு தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுதல் இன்றி யமையாததாக உள்ளது என்று இயேசு போதித்தார். அந்த வேளையில், கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்னர் பழைய பிரமாணமே கட்டளைகளாக இருந்தது.[3] இவ்விதமாக இயேசு, பத்துகட்டளைகளில் இருந்து மேற்கோள்

*காண்பித்தார். இன்றைய நாட்களில் நாம், கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கைகளின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம், ஆனால் கர்த்தருடைய கட்டளைகள் இன்னமும் கட்டுப்படுத்துகின்றன. இயேசு, ''நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்'' என்று கூறினார் (யோவா. 14:15). யோவான், "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்புகூருவதாம்" என்று எழுதினார் (1 யோவா. 5:3அ).*

*அந்தக் கட்டளைகள் எவை? அவற்றில் ஒரு சிலவற்றை உங்களுக்கு நினைவுபடுத்த என்னை அனுமதியுங்கள்:[4] "நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்''; ''நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்"; "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்"; "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்று கிறிஸ்து கூறினார் (யோவா. 8:24; லூக். 13:3; மத். 10:32; மாற். 16:16). ஏற்கனவே சீஷர்களாயிருந்த தனிநபர்களுக்கு இயேசு, "முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" என்று கூறினார் (மத். 10:22).*

*இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: நித்திய ஜீவனைப் பெறுவது எப்படி என்று அறிவதற்கு மனிதர்களைக் கண்ணோக்காதீர்கள்; வேதாகமத்தைக் கண்ணோக்குங்கள். மேலும் தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் ஏற்றதாக்கிக் கொள்வதற்கு நாம் சிலவற்றைச்* செய்யவேண்டும் *என்று கிறிஸ்து போதித்தார்.*

*இந்த இளைஞரிடத்தில் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்று இயேசு கூறியபோது, இந்த இளைஞர் இன்னமும் திருப்தியடையாதிருந்தார். இவர், "போதகரே, இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்'' என்று கூறினார். அதை உங்களால் கூறமுடிந்தால் நல்லதென்று நீங்கள் விரும்பவில்லையா? நம்மில் பலர் இவ்வாறு கூறமுடியாது. முதலில், நாம் சரியானவற்றை எப்போதுமே செய்திருக்கவில்லை. இரண்டாவது, நாம் இளைஞர்களாயிருந்தபோது, சரியானவற்றைச் செய்வதற்கு முயற்சிக்கத் தொடங்காது இருந்திருக்கலாம். தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்குத் தங்களை ஒப்புக்கொடுத்துள்ள இளைஞர்களையும் இளம்பெண்களையும் காண்பதென்பது எப்போதும் மெய்சிலிர்க்கச் செய்வதாக உள்ளது.*

*மத்தேயு சுவிசேஷத்தின்படி, அந்த வேளையில் இம்மனிதர், ''இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன?'' என்று கேட்டார் (மத். 19:20). செய்ய வேண்டியவையென்று இவர் அறிந்திருந்த யாவற்றையும் செய்திருந்தார், எனவே இவர் (KJVயின் சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்துவதென்றால்) "நான் இன்னும் எதில் குறைவுள்ளவனாய் இருக்கிறேன்?" என்று கேட்டார். ஆய்வு செய்யும் அந்தக் கேள்வியை நாம் ஒவ்வொருவருமே தீவிரமாக ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.*

*இந்த இளைஞர் தாம் எதில் குறைவுபட்டிருந்தார் என்று கேட்டபோது,*

*"இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்[தார்]" (மாற். 10:21). இந்தப் பிரசங்கத்தின் தொடக்கத்தில் குறிப்பிட்டபடி, கர்த்தர் ஒரு நபரின் உள்ளத்திலிருப்பதைக் காணமுடியும். அவர் இம்மனிதரின் இருதயத்திற்குள் கண்ணோக்கியபோது, தாம் கண்டதை அவர் விரும்பினார். அவர் தாம் பார்த்த ஒவ்வொன்றையும் விரும்பவில்லை, ஆனால் அங்கு மெய்யான அக்கறையும் மாபெரும் சாத்தியக்கூறும் இருந்தது. இவ்விதமாக, "இயேசு, … அவனிடத்தில் அன்புகூர்ந்[தார்]."*

*நீங்கள் நேசிக்கும் ஒருவருக்கு உங்கள் வார்த்தைகள் அப்போதைக்கு அவரது இருதயத்தைப் புண்படுத்தும் என்பதை அறிந்தும் அவ்விதமான சிலவற்றை அவருக்கு நீங்கள் எப்போதாவது கூறவேண்டிய நிலை உங்களுக்கு ஏற்பட்டுள்ளதா? இயேசு அதையே செய்தார். இம்மனிதரின் பிரச்சனை என்ன என்பதை இயேசு அறிந்திருந்தார் - மற்றும் அவர் இம்மனிதர்மீது அன்புகூர்ந்த காரணத்தால்,[5] அவர், "உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றி வா" என்றார்.*

*கர்த்தருடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கு, இரு விஷயங்களை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். முதலாவது, இந்த இளைஞருக்கு இயேசு தமது சிந்தையில் ஒரு விசேஷித்த பணியைக் கொண்டிருந்தார் என்பது தெளிவு. [இவ்விடத்தில் அவரது] அறிவுறுத்துதல்கள் முழுநேர சீஷர்களிடத்தில் கேட்கப்பட்டதாகவே இருந்தன: "எல்லாவற்றையும் விட்டு என்னைப் பின்பற்றி வாருங்கள்" (மத். 4:18-22; லூக். 5:11, 27, 28).*

*இரண்டாவது, கர்த்தருக்கு முழுமையான ஒப்புக்கொடுத்தல் என்பது எந்த சீஷருக்கும் ஒரு முன் நிபந்தனையாக உள்ளது. தேவன் "எரிச்சலுள்ள தேவனாக" இருக்கின்றார் (யாத். 20:5), மற்றும் அவர், பிரிவுபட்டுள்ள பிரியத்தின்மீது முகமலர்ச்சியடைய மாட்டார். இந்த இளைஞரின் விஷயத்தில், இவர் கிறிஸ்துவின் சீஷராக இருப்பதைக்காட்டிலும் தமது உடைமைகளை அதிகமாக நினைத்தார். இவரது பணமானது இவருக்கும் முழுமையான ஒப்புக்கொடுத்தலுக்கும் இடையில் நின்றது, எனவே அதை விட்டுவிடும்படி இயேசு இவரிடத்தில் கூறினார். நம்மை அவருக்கு முழுமையாக அர்ப்பணித்தலைத் தடை செய்கிற எதையும் விட்டுவிடும்படி அவர் நம் எல்லாரிடத்திலும் வற்புறுத்துகின்றார். அது பணமாக இருக்கக் கூடும். அது ஒரு தனிப்பட்ட சந்தோஷமாக இருக்கலாம், ஒரு தனிப்பட்ட தவறாக இருக்கலாம், அல்லது தவறான வகையிலான நண்பர்களாய் இருக்கலாம். அது என்னவாக இருந்தாலும், நமது சிந்தனைகள் மற்றும் பற்றுக்கள் ஆகியவற்றில் கர்த்தரே முதலாமவராக இருக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்துகின்றார்.*

*மகிழ்ச்சியற்ற முடிவுகளைக் கொண்ட கதைகளை நீங்கள் விரும்பவில்லையென்றால், ஒருவேளை நீங்கள் இதனுடைய முடிவைக் கவனிக்கக்கூடாது. இந்த மனிதரின் முன்னுரிமைகளை இயேசு சோதித்தார் - மற்றும் இவர் அந்த சோதனையில் தோல்வியடைந்தார். "அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்ட*

பொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்."

இவருக்கு இருந்தது என்னவென்றால், இவர் கவலையாயிருந்தார். இன்றைய நாட்களில் சிலர் செய்வதுபோல், இவர் கிறிஸ்துவின் அழைப்பை மரியாதைக் குறைவான வகையில் மறுக்கவில்லை.[6] இவர் கர்த்தரை நேசித்தார், ஆனால் தமது பணத்தையும் நேசித்தார் - மற்றும் இவை யிரண்டில் ஒன்றை இவர் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது, எனவே இவர் கவலையாயிருந்தார். இவர் இவ்விரண்டில் ஏதொன்றையும் விட்டுவிட விரும்பவில்லை, எனவே இவர் இயேசுவை விட்டுவிட்டபோது துக்கம் நிறைந்தவர் ஆனார். பின்வருவதைப் பற்றிச் சிந்தியுங்கள்: இவர் கிறிஸ்துவை நேசித்தார்; இவர் தமது பணத்தை *அதிகமாக* நேசித்தார். உங்கள் பற்றுதல்களை எவ்விடத்தில் வைக்கின்றீர்கள் என்பது பற்றி ஜாக்கிரதையாயிருங்கள்.

"இவர் துக்கத்துடன் சென்றார்" - ஆனால் இவர் சென்று விட்டார், மற்றும் முடிவு விளைவானது இவர் மரியாதையின்மை நிறைந்தவராக மற்றும் முரட்டுத்தனமாக இருந்திருந்தது போன்றதாகவே இருந்தது. இவர் தவறான தெரிந்துகொள்ளுதலை மேற்கொண்டவராக, தாம் விரும்பிய நித்திய ஜீவனில் இருந்து தம்மை விலக்கிக் கொண்டவராக ஆனார்.

நான் உங்களிடத்தில் ஒரு கேள்வியைக் கேட்க அனுமதியுங்கள்: கிறிஸ்து ஒருவரை அன்புகூர்ந்திருந்தும், அந்த நபர் இன்னமும் இழந்து போகப்படக் கூடுமா? கிறிஸ்து இம்மனிதரை நேசித்தார், ஆனாலும் இவர் இழந்து போனார். கர்த்தருடைய அன்பு (ரோமர் 5:8) மாத்திரம் போதுமானதாக இருப்பதில்லை. நீங்கள் - அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படி வதினால் - அந்த அன்பைத் திருப்பிச் செலுத்த விருப்பமுள்ளவராய் இருக்க வேண்டும் (யோவா. 14:15).

## உங்கள் வாழ்வில் குறை எது?

இந்த இளைஞரின் வரலாறு கவலையான ஒரு குறிப்புடன் முடிந்தது, ஆனால் இந்தப் பிரசங்கம் ஒரு மகிழ்ச்சியான முடிவைக் கொண்டிருக்கக் கூடியது எவ்வாறு என்று உங்களுக்குக் கூற என்னை அனுமதியுங்கள்: இந்த மனிதர் கேட்ட அதே கேள்விகளை நீங்களும் கேட்டு, கர்த்தர் உங்களுக்குக் கூறுவதைச் செய்யுங்கள். "இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன?" என்று கேட்டுத் தொடங்குங்கள். சற்று நேரத்திற்கு முன்பு நாம், இயேசுவின் கட்டளைகளில் ஒரு சிலவற்றைக் குறிப்பிட்டோம். உங்களிடம் விசுவாசத் தில் குறைவு உள்ளதா? உங்களிடம் மனந்திரும்புதலில் குறைவு உள்ளதா? உங்களிடம் அறிக்கையிடுதலில் குறைவு உள்ளதா? உங்களிடம் ஞானஸ் நானம் பெறுவதில் குறைவு உள்ளதா? உங்களிடம் உண்மை நிறைந்த, ஒப்புக்கொடுத்தலுள்ள கிறிஸ்தவ வாழ்வில் குறைவு உள்ளதா? கிறிஸ்து தம்மிடத்தில் விசாரித்தவருக்கு, "உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு" என்று கூறினார் (மாற். 10:21). தேவனுக்கு உங்கள் பதில்செயலில் வலிவார்ந்த வகையில் ஏதேனும் குறைவாக உள்ளதா? ஒரு பாகம் குறைவு பட்டதால் ஒரு பெரிய இயந்திரம் ஒன்று களத்தில் சும்மா இருப்பதை நான்

*பார்த்திருக்கின்றேன். ஒரு கருவி - சுக்கான் - மட்டும் இல்லாத கப்பல் திறனற்றதாகிவிடும்.*[7]

*கர்த்தருடைய நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றிற்குக் கீழ்ப்படியத் தவறுதல் என்பது பேரழிவுக்கு உரியதாகிவிடும். இயேசு, ''... நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்''; ''நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்''; ''... என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் ... பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்''; ''ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்'' என்று கூறினார் (யோவா. 8:24; லூக். 13:3; மத். 10:33; யோவா. 3:5). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், ''இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்?'' என்று கிறிஸ்தவர்களிடத்தில் கேட்டார் (எபி. 2:4). உங்கள் வாழ்வில் குறைவுபட்டுள்ளது என்ன என்பதைக் கர்த்தர் அறிகின்றார் - அநேகமாக நீங்களும் அறிந்திருக்கலாம்.*

---

*குறிப்புகள்*

*[1]மாற்கு 10 இந்தப் பிரசங்கத்திற்கான அடிப்படை வேத வசனமாக உள்ளது, ஆனால் அவ்வப்போது நான், மத்தேயு 19 மற்றும் லூக்கா 18 ஆகிய இணைவசனப் பகுதிகளில் இருந்து மேற்கோள்களை எடுத்துக் கொள்கின்றேன். [2]ரோமர் 4:5 மற்றும் தொடர்பான வேத வசனப்பகுதிள் ஆகியவை, நாம் நமது இரட்சிப்பை ஈட்ட இயலாது என்று போதிக்கின்றன; ஆயினும் அவைகள், நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் தேவனுக்குக் கீழ்ப்படிதல் முக்கியமற்றதாக உள்ளது என்று கூறுவதில்லை. [3]இயேசு மரணம் அடைந்த வரையிலும் பழைய உடன்படிக்கை அமலில் இருந்தது; அந்த வேளையில், புதிய உடன்படிக்கை அமலுக்கு வந்தது (கொலோ. 2:14; எபி. 9:15-17ஐக் காணவும்). [4]இந்தப் பிரசங்கம், உங்கள் உரையைக் கேட்பவர்களின் வாழ்வில் நிலவுகிற ''குறைவு'' எதைப் பற்றியாவது எடுத்துரைக்கப் பயன்படுத்தப்பட முடியும். இந்த எடுத்துரைப்பில், கிறிஸ்தவராவது என்பதற்கு வலியுறுத்தம் தரப்படுகிறது, ஆனால் இந்தப் பிரசங்கத்தை உண்மை நிறைந்த கிறிஸ்தவ வாழ்வை வாழுதல் என்பதன்மீது கவனம் குவிக்கும்படி பயன்படுத்தப்படவும் கூடும். [5]எபிரெயர் 12:6ஐக் காணவும். [6]கர்த்தருக்குக் கீழ்ப்படியும்படி நீங்கள் மக்களை வற்புறுத்தியபோது, நீங்கள் பெற்றுக்கொண்ட அக்கறையற்ற பதில்களின் உதாரணங்களைக் கொடுக்க நீங்கள் விரும்பலாம். [7]''ஒரே ஒரு விஷயம்'' குறைவுபடுதலைக் கொண்டிருப்பதில் உள்ள அழிவுக்குரிய செயல்விளைவில் உங்கள் சொந்த அனுபவத்திலிருந்து நீங்கள் கருத்தை விவரியுங்கள்.*